மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி, சேலம்
முன்னிலை: திரு. ஆர். ராதாகிருஷ்ணன், பி.எ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்ககிரி.

2024-ஆம் வருடம் மார்ச் மாதம் 02-ஆம் நாள் சனிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2054, சோபகிருது வருடம், மாசி திங்கள் 19 ம் நாள் சனிக்கிழமை

**இ.ம.எண்.8/2023 இன் அ.வ.எண்.136/2008**

செங்கோட்டையன் ... மனுதாரர் / 3 ம் பிரதிவாதி

**/ எதிராக /**

பவதாரணி ... எதிர்மனுதாரர் / வாதி

இந்த மனுவானது 05.10.2023 ஆம் நாள் இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 02.03.2024 ஆம் தேதி இறுதியாக என் முன்பு விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு. K. காசிலிங்கம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர்கள் திரு. N. ராஜகோபாலன் மற்றும் திரு. R. ராமசாமி ஆகியோர்கள் ஆஜராகியும், மனுவுரை, எதிருரை மற்றும் வழக்கு கோப்புகளை ஆராய்ந்தும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டறிந்தும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரர்/3 ம் பிரதிவாதி இந்த மனுவை உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை VIII விதி 9 மற்றும் பிரிவு 151 இன்கீழ் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அனுமதிக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :-**

மனுதாரர் அசல் வழக்கில் 3 ம் பிரதிவாதி ஆவார். எதிர்மனுதாரரால் அசல் வழக்கானது விளம்புகை, பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி இந்த மனுதாரர் மற்றும் இதர நபர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/வாதியால் அசல் வழக்கின் வழக்குரையை திருத்தம் செய்யக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டு, அது அனுமதிக்கப்பட்டு கடந்த 02.09.2023 ஆம் தேதி திருத்தப்பட்ட வழக்குரை தாக்கல் செய்யப்பட்டது. அசல் வழக்கில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய கடந்த 14.09.2023 ஆம் தேதியன்று வாய்தா போடப்பட்டது. மேற்கண்ட தேதியில் வழக்கறிஞர்கள் நீதிமன்ற புறக்கணிப்பில் இருந்ததால் அன்று கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது. கூடுதல் எதிர்வழக்குரையை தாக்கல் செய்யாதது

வேண்டுமென்றோ, விருப்பப்பட்டோ ஏற்பட்டதல்ல. கூடுதல் எதிர்வழக்குரையை இந்த வழக்கிற்கு மிக முக்கியமான ஒன்றாகும். இந்த மனுவை அனுமதிக்காவிடில், மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும். எனவே, மனுவானது அனுமதிக்கப்பட வேண்டும் என்று கூறி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3) எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :-</u>

(i) மனுவில் கண்ட சங்கதிகள் அனைத்தும் சட்டப்படியும், நியாயப்படியும், பொருண்மைகள் அடிப்படையிலும் நிலைக்கத்தக்கதல்ல. மனுவில் கண்டுள்ள சங்கதிகளில் எதிர்மனுதாரர் குறிப்பாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள அனைத்து சங்கதிகளும் பொய்யானவைகளாகும்.

(ii) உண்மையில் எதிர்மனுதாரர் மேற்படி அசல் வழக்கை தாக்கல் செய்தபோது இளவராக இருந்ததால் அவருக்கு அவரது தாய் வழி பாட்டி பெருமாயி பாதுகாவலராக இருந்து தாக்கல் செய்துள்ளார். தற்பொழுது எதிர்மனுதாரர் உரிய வயதை அடைந்துவிட்டதால் அவரை உரிய வயதினை அடைந்தவர் என்று அறிவிக்க வேண்டியும், பாதுகாவலரை நீக்கம் செய்ய வேண்டியும் மனு தாக்கல் செய்து, அதனடிப்படையில் திருத்தப்பட்ட வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காகதான் கடந்த 14.09.2023 ஆம் தேதியன்று வாய்தா போடப்பட்டிருந்தது. அதற்காக மனுதாரர் தரப்பில் கூடுதல் பதிலுரை தாக்கல் செய்ய வேண்டியதில்லை என்பதால்தான் வேண்டுமென்றே கூடுதல் பதிலுரை தாக்கல் செய்யாமல் விட்டுவிட்டார்கள். அவ்வாறு கூடுதல் பதிலுரை இருந்திருந்தால் கடந்த 14.09.2023 ஆம் தேதியன்றே வழக்கறிஞர்கள் நீதிமன்ற புறக்கணிப்பில் இருந்ததாலும் மனுதாரரே நீதிமன்றத்தில் ஆஜராகி கூடுதல் பதிலுரை தாக்கல் செய்திருக்கலாம்.

(iii) மனுதாரர் அசல் வழக்கிற்கு கடந்த 04.09.2008 ஆம் தேதியில் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். அந்த எதிர்வழக்குரையில் வழக்கு சொத்துக்கள் 1 ம் பிரதிவாதிக்கு பரம்பரையாக பாத்தியப்பட்டது என்பதை ஒப்புக்கொண்டு அதை பற்றி எந்த மறுப்பும் தெரிவிக்கவில்லை. ஆனால் மனுதாரர் மேற்படி வழக்கிற்கு பதிலுரை தாக்கல் செய்து சுமார் 15 வருடங்கள் கழித்து தற்போது வழக்கு சொத்துக்கள் 1 ம் பிரதிவாதியான பரம்பரை சொத்துக்கள் என்றும், அந்த சொத்துக்கள் 1 ம் பிரதிவாதிக்கு 15.12.2003 ஆம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின்படி அவருக்கு ஒதுக்கப்பட்டுவிட்டதால் அந்த சொத்துக்கள் அவருடைய சுயசம்பாத்திய சொத்துக்கள் என்றும், அதனால் அவருக்கு அந்த சொத்துக்களை விற்பனை செய்ய உரிமை உள்ளது என்று முன்பு தாக்கல் செய்த எதிர்வழக்குரைக்கு மாறாக புதிய சங்கதிகளை குறிப்பிட்டு இந்த கூடுதல் எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளார். அவ்வாறு குறிப்பிடுவதற்கு சட்டத்தின் எந்த இடமுமில்லை. மனுதாரர்

அசல் வழக்கை நடத்தாமல் காலம் கடத்தி இந்த எதிர்மனுதாரருக்கு பலவிதங்களிலும் இன்னல்கள் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே, மனுதாரரின் இந்த மனுவானது செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று கூறி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இருதரப்பிலும் மனு பிரச்சனையை தீர்வுகாணும்பொருட்டு ஆவணம் மற்றும் வாய்மொழி சாட்சியங்கள் எதுவும் முன்வைக்கப்படவில்லை.

5) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இம்மனு நிலைக்கதக்கதா? என்பதே தீர்வுகாணவேண்டிய பிரச்சனையாகும்.

6) <u>தீர்வு :-</u>

இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனத்துடன் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனுவானது மனுதாரர்/3 ஆம் பிரதிவாதி தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அனுமதிக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

7) மனுதாரர் தரப்பில் அசல் வழக்கானது கடந்த 14.09.2023 ஆம் தேதியன்று மனுதாரர் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டிருந்ததாகவும், 14.09.2023 ஆம் தேதியன்று வழக்குரைஞர்கள் நீதிமன்ற புறக்கணிப்பில் இருந்ததால், மனுதாரர் தரப்பு வழக்குரைஞர் நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லை என்றும், ஆகையால், கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய முடியவில்லை என்ற வாதம் முன்வைக்கப்பட்டது.

8) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில் அசல் வழக்கு எண்.316/2008 வழக்கானது பாகப்பிரிவினை கோரியும், 1 ஆம் பிரதிவாதியால் 3 ம் பிரதிவாதி பெயரில் கடந்த 11.07.2006 ஆம் தேதியன்று ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணம் மற்றும் 11.09.2007 ஆம் தேதியன்று ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணம் ஆகியவைகளை வாதியை கட்டுப்படுத்தாது என்றும், நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. அசல் வழக்கில் கடந்த 04.09.2008 ஆம் தேதியன்று எதிர்வழக்குரையும், அதன்பின்னர் கடந்த 23.08.2010 ஆம் தேதியன்று கூடுதல் எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. அசல் வழக்கில் வாதி தரப்பில் வா.சா.1 சாட்சி விசாரிக்கப்பட்டுள்ளார். பின்பு பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.1 விசாரிக்கப்பட்டு, பி.வா.சா.1 சாட்சி குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் இருந்து வந்த

நிலையில், வாதியானவர் நிறைவயது (Majority) அடைந்துவிட்டார் என்பதற்காக வழக்குரையில் திருத்தம் மேற்கொண்டு பின்னர் மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் கூடுதல் வழக்குரை தாக்கல் செய்யாதநிலையில், கடந்த 14.09.2023ஆம் தேதியன்று கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் வாய்ப்பு முடிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

9) மனுவில் கூறியுள்ள சங்கதிகள் மற்றும் காரணங்களை கருத்தில் கொண்டும், மேலும் மனுதாரர் அசல் வழக்கில் 3ம் பிரதிவாதி என்பதாலும், அசல் வழக்கானது பாகப்பிரிவினை, விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள நிலையிலும், மனுதாரருக்கு அவருக்கெதிரான வழக்கை எதிர்கொள்ள மேலும் ஒரு வாய்ப்பு அளிக்கும் பொருட்டு, இம்மனுவினை அனுமதிப்பதே நீதிமக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் முடிவு செய்து, இம்மனுவினை அனுமதித்து உத்தரவு பிறப்பிக்கிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு நகல் எடுக்கப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 02.03.2024 ஆம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒப்பம்) ஆர். ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.

**<u>பிற்சேர்க்கை:-</u>** இல்லை.

(ஒப்பம்) ஆர். ராதாகிருஷ்ணன்,
மா.உ.நீ.,
சங்ககிரி.